1973 நவம்பர் 27]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை.

(இ) இல்லை.

சரக்கன் ஓடையின் குறுக்கே பாலம்

*441 வினா—**திரு. க. உரொ. எட்மண்ட் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் வட்டம், ஆழ்வார்திருநகரி ஒன்றியத்திலுள்ள கடையனோடை ஊராட்சி மன்ற எல்லையிலுள்ள சரக்கன் ஓடையின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) அரசின் பரிசிலனையில் உள்ளது.

ரெங்கசமுத்திரம் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தொட்டி

* 442 வினா—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், ஆண்டிபட்டி ஒன்றியத்தால் ரெங்கசமுத்திரத்தில் குடிநீருக்கு மேல்நிலை நீர்த்தொட்டி கட்ட தீர்மானம் 1972-ம் வருடம் நிறைவேற்றப்பட்டும், வேலை மேற்கொள்ளாமல் இருப்பதின் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மதுரை மாவட்டம் ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியத்தில் கிராம வேலைத் திட்டத்தின் கீழ் மேல்நிலை நீர்த்தொட்டி கட்டுவது சம்பந்தமாக 1970-ம் ஆண்டு (1) எம். சுப்புலாபுரம், (2) வண்டியூர், (3) டி. மீனாட்சிபுரம், (4) ராஜாக்காள்பட்டி, (5) ரெங்கசமுத்திரம் ஆகிய 5 ஊர்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு நிதி ஒதுக்கீட்டிற்குத் தகுந்தாற்போல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் முதல் நான்கு கிராமங்களிலும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. ரெங்கசமுத்திரம் கிராமத்தில் நீர்த்தேக்க தொட்டி கட்டும் வேலைக்கு ரூ. 24,000-ல் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தொழில் நுணுக்க அனுமதி

கிடைத்தவுடன் 1973-74 நிதி ஆண்டில் மேற்படி வேலை கிராமப் பணித் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீட்டில் செய்து முடிக்கப்படும்.

திரு. நா. வெ. குருசாமி : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்காகக் கோட்டப் பொறியாளரால் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஊராட்சி ஒன்றியத்தினாலே அங்கீகரிக்கப்பட்டு இப்பொழுது அந்தத் திட்டத்தைச் செய்ய முடியாது என்று அங்குள்ள ஆணையர் கூறுகிறார். காரணம் இப்படிப்பட்ட வேலைகளையெல்லாம் குடிநீர் வாரியம்தான் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்களே, ஆகவே, உடனடியாக டெண்டருக்கு விடக் கூடிய ஸ்டேஜிலே இருந்த இந்தத் திட்டத்தைச் செயல் படுத்துவதற்கு அரசாங்கம் ஆணையிடுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஏற்கனவே ஐந்து ஊர்களுக்கும் சேர்த்து பொதுவாக ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதிலே நான்கு ஊர்களிலே கட்டி முடிக்கப்பட்டு விட்டது. பாக்கியுள்ள ஒன்றிற்கும் மதுரை கோட்டப் பொறியாளர் தொழில் நுணுக்க அனுமதி பெற்று கட்டி முடிக்கலாம் என்று உத்திரவிடப் பட்டுள்ளது.

திரு. எஸ். ஆறுமுகம் : மேல்நிலை நீர்த்தொட்டி, பள்ளிக் கூடங்கள் இவற்றைக் கட்டுவதனைப் பொறுத்தவரையில் ஒன்றியத்தினுடைய நிதி நிலைமை சர்ப்ளஸ் ஆக இருந்தால் அவர்களே கட்டிக்கொள்ள வேண்டுமானால் அவர்கள் அரசாங்கத்தின் அனுமதி பெறவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, நிதிநிலை அதிகமாக இருந்தால் அப்படிப்பட்ட ஒன்றியங்கள் அவர்களாக அப்படிப்பட்ட காரியங்களை அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களின் அனுமதியைப் பெற்று செய்து கொள்ளலாம் என்று அமைச்சர் அவர்கள் உடனடியாக ஆணை யிடுவார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலே நிதி அதிகமாக இருந்தால் அவைகள் தாங்களாகவே தங்களுக்கு வேண்டிய குடிதண்ணீர், இணைப்புச் சாலைகள், பள்ளிக் கட்டடங்கள் ஆகிய வேலைகளைச் செய்வதற்கு நிதி நிலையை உத்தேசித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களே உத்திரவு வழங்கலாம் என்று சமீபத்தில் அறிவிக்கப் பட்டிருக்கிறது. இன்னும் ஒன்றியத் தலைவர்களுக்கு வாயில்லையோ

என்னவோ தெரியவில்லை. ஏற்கனவே, அதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Mini Super market at Nanganallur

* 443 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether any Mini Super Market has been opened at Nanganallur near Madras City by the Nanganallur Co-operative Stores ;

(*b*) whether any financial assistance has been given for this market; and

(*c*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) முதல் (உ) வரை : நங்கநல்லூர் கூட்டுறவு பண்டகசாலை, நங்கநல்லூரில், 13--5--1973 அன்று, ரூ. 45,000 அரசு உதவி பெற்று ஓர் சிற்றங்காடியை ஆரம்பித்துள்ளது.

Mini deposits Scheme in Co-operative Banks

* 444 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether women candidates have been appointed in the Central Co-operative Banks as Agents for collecting money under the Mini Deposits Scheme; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு மன்னை ப. நாராயணசாமி: (அ) & (இ) ஒரு பெண் வேட்பாளர் தஞ்சாவூர் கூட்டுறவு மத்திய வங்கியில் நியமிக்கப்பட்டார். ஆனால் அவர் வேலையில் சேரவில்லை.

Plantation Labour Housing Scheme

* 445 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the representatives of the Tamil Nadu Government discussed the housing for Plantation employees with the Union Minister for State for Housing about 20th April 1973; and

(*b*) if so, the details thereof?